TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044363

1. District மாவட்டம்: Coimbatore  PS காவல்நிலையம்: V & AC  Year ஆண்டு: 2022  FIR No. மு.த.அ. எண்: 09/2022/AC/CB  Date நாள்: 31.05.2022

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018  Sections பிரிவுகள்: 7(b)

(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 30.5.2022  Date to : நாள் வரை 31.05.2022

Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 18.00 hrs  Time to : நேரம் வரை 01.30 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.05.2022  Time நேரம் : 04.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD.No. II  Time நேரம் : 04.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Computer Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  About 15 KM South West

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி  Office of the Coimbatore District Co-operative Milk Producer's Union Ltd., Pachapalayam, Coimbatore.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt.V.Santhamani  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –

Date of Issue : வழங்கப்பட்ட நாள் –  Place of Issue : வழங்கப்பட்ட இடம் –

(f) Occupation : தொழில் Deputy Inspection cell Officer  (g) Address : முகவரி District Inspection cell Office, Collectorate, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. A. Krishnamoorthy, S/o. Arumugam, Senior Factory Assistant, Quality Control Section, O/o. the Coimbatore District Co-operative Milk Producer's Union Ltd., Pachapalayam, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted:-
Separate Sheets attached herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed P. PARIMALADEVI Rank Inspr. of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Coimbatore on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 31/05/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 31/05/2022
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 31.05.2022 @ 05.40 Hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. EZHILARASI
Rank: நிலை Inspector of Police, No. எண்
Vigilance and Anti-Corruption
Coimbatore.
31.05.2022

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

**கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 09/2022/AC/CB ச/பி. 7(b) ஊழல் தடுப்பு சட்டம் 1988, ஊழல் தடுப்பு (திருத்தப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

இன்று 31.05.2022-ம் தேதி 04.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி. V.சாந்தாமணி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 09/2022/AC/CB u/s. 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ஆக 05.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், திருமதி. V.சாந்தாமணி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கோயமுத்தூர். ந.க.எண். 347/2022/ஐ1, நாள்: 31.05.2022 அம்மா, பொருள்: திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம்- கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட், பச்சாபாளையம் - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. கோவை மாவட்டம், பச்சாபாளையத்தில் உள்ள கோவை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட் அலுவலகத்தில் 1993 ஆம் ஆண்டு முதல் பல்வேறு காலகட்டங்களில் தினக்கூலி பணியாளராக பணியில் சேர்ந்த 11 பணியாளர்கள் நீதிமன்றத்தின் உத்தரவுபடி முறையே 2001, 2005, 2006, 2008-ஆம் ஆண்டுகளில் நிரந்தர பணியாளர்களாக்கப்பட்டு பணிவரன் முறைபடுத்தப்பட்டு, மேற்படி நபர்களுக்கு 2007-ஆம் முதல் பணப்பயன் (Monitory benefit) வழங்க ஆணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பணி வரன்முறை செய்யப்பட்ட காலத்திலிருந்து மேற்படி 11 நபர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத்தொகையை (Arrear Amount) ஆனது 2007-ஆம் ஆண்டு முதல் வழங்க செயல்முறை ஆணைகள் கடந்த 2021ஆம் ஆண்டு மே மாதத்தில் இவ்வலுவலகத்தில் பிறப்பிக்கப்பட்டது. மேற்படி நிலுவைத்தொகையினை சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு வழங்க ஆணையிட்டதற்கு தலா ரூ.3,00,000/- லஞ்சமாக இவ்வலுவலகத்தில் முது நிலை தொழிற்சாலை உதவியாளர் (Senior

Factory Assistant) திரு.A.கிருஷ்ணமூர்த்தி என்பவர் கேட்டு வசூலித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்கபோவதாக கிடைக்கபெற்ற நம்பகமான தகவலின் பேரில் கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.V.சாந்தாமணி, கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் காவல் குழுவினர் சகிதம் புறப்பட்டு பச்சாபாளையத்தில் உள்ள மேற்படி கோவை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட் அலுவலகத்தினை 30.05.2022-ம் தேதி மாலை சுமார் 17.30 மணியளவில் இவ்வலுவலக பொது மேலாளர் திரு.ராமநாதன் என்பவரிடம் சோதனை குழுவினரை அறிமுகப்படுத்திக்கொண்டு திடீர் தணிக்கை செய்ய வந்த விபரம் தெரிவிக்கப்பட்டு திடீர் தணிக்கை ஆரம்பிக்கப்பட்டது. முதலில் பொது மேலாளர் அறையினை சோதனை செய்ததில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை, அதனை தொடர்ந்து பொது மேலாளரின் அறையின் வெளியே நின்றிருந்த நபரை விசாரிக்க தனது பெயர் திரு.கிருஷ்ணமூர்த்தி என்றும் அவர் இவ்வலுவலகத்தில் கடந்த 36 வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும் தற்போது முது நிலை தொழிற்சாலை உதவியாளர் (Senior Factory Assistant) ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேற்படி அவரிடம் ஆய்வுக்குழுவினர் தங்களை அறிமுகப்படுத்தி கொண்டு அவரிடம் சம்பள நிலுவைத்தொகையினை வழங்கியதற்கு ஏற்பாடு செய்ததற்கு மேற்படி 11-நபர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட லஞ்சத்தொகையைப் பற்றி கேட்கப்பட்டது. அதற்கு அவர் இவ்வலுவலகத்தில் முது நிலை தொழிற்சாலை உதவியாளர்களாக பணிபுரிந்து வரும் திரு.சண்முகம், திரு.குப்புசாமி மற்றும் திரு.முத்துசாமி என்பவர்களிடமிருந்து பணம் கேட்டுப்பெற்றதாக தெரிவித்தார். மேற்படி திரு.சண்முகம் மற்றும் திரு.குப்புசாமி ஆகியோர்களிடம் வசூலித்த தொகையை அவர் பயன்படுத்தி வரும் TN 38 BQ 5447 என்ற பதிவு எண் கொண்ட சிவப்பு நிற Alto Car-ன் டிக்கியில் வைத்திருப்பதாக தெரிவித்து, மேற்படி காரின் டிக்கியில் வைத்திருந்த கருப்பு நிற பேக்கிலிருந்து புத்தம்புதியதாக 15 கத்தைகளில் இருந்த 200 ரூபாய் நோட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிபார்க்க அதில் 1500x200 = 3,00,000/- இருந்தது. அது குறித்து விசாரிக்க மேற்படி திரு.சண்முகத்திடமிருந்து 27.05.2022-ஆம் தேதி மதியம் 500 ரூபாய் தாள்களாக பெறப்பட்டு இதே அலுவலகத்தில் விற்பனை பிரிவில் முது நிலை தொழிற்சாலை உதவியாளராக பணிபுரியும் திரு.அர்ஜுனன் என்பவரிடம் கொடுத்து புத்தம் புது 200 ரூபாய் நோட்டு கத்தைகளாக மாற்றிவைத்துள்ளதாக

தெரிவித்தார். அதனை தொடர்ந்து மேற்படி கருப்புநிற பேக்கிலிருந்து 6 கத்தைகளாக இருந்த 500 ரூபாய் நோட்டு கத்தைகளை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிபார்க்க அதில் 580 x 500 = 2,90,000/- இருந்தது. அது குறித்து திரு.கிருஷ்ணமூர்த்தியிடம் விசாரிக்க மேற்படி ரூ.2,90,000/- திரு.குப்புசாமி என்பவரிடமிருந்து கேட்டு பெற்றுக்கொண்ட தொகை என்று தெரிவித்தார். எனவே மேற்படி காரின் டிக்கியில் வைக்கப்பட்டிருந்த கருப்பு நிற பையிலிருந்து ஆக மொத்தம் ரூ.5,90,000/-ஐ மேல் அதிகாரிகளுக்கு கொடுப்பதற்காக வாங்கிய லஞ்சபணம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி கருப்பு பையில் வைக்கப்பட்டிருந்த Pay Slip-உடன் கூடிய காசோலை எண் 723184 பணம் ரூ.2,00,000/- தேதி 27.02.2022 மற்றும் காசோலை எண் 723185 பணம் ரூ.2,40,000/- தேதி 27.05.2022 ஆகியவைகள், Account No.20149126389 A.Krishnamoorthy என்பவரது பெயருக்கு திரு.சண்முகம் என்பவரது State Bank of India, பேரூர் கிளை வங்கி கணக்கு எண்.20190987462 இருந்து வழங்கப்பட்டதாகும். அதை பற்றி விசாரிக்க அது குறித்து தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி இரண்டு காசோலைகளும் பொது மேலாளர் திரு.ராமநாதன் அவர்கள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி திரு.முத்துசாமி என்பவரிடமிருந்து பெறப்பட்ட தொகையை பற்றி விசாரிக்க அவர் தான் பணிபுரிந்து வரும் Quality Control Lab-ல் தான் பயன்படுத்தி வரும் டிராயரில் வைத்திருப்பதாக தெரிவித்ததின்பேரில், மேற்படி Quality Control Lab-ற்கு பொது மேலாளர் திரு.ராமநாதன் மற்றும் Quality Control உதவி பொது மேலாளர் திரு.அந்தோனி ஆகியோர்களுடன் புறப்பட்டு செல்லப்பட்டது. அங்கு மேற்படி டேபிள் டிராயரானது “C” என்று குறியீடு செய்யப்பட்டதை திரு.கிருஷ்ணமூர்த்தியால் அடையாளம் காண்பிக்கப்பட்டது, அதன் சாவி குறித்து அவரிடம் கேட்க தன்னிடம் இல்லை என்று தெரிவித்தார். அதனை தொடர்ந்து Quality Control உதவி பொது மேலாளர் திரு.அந்தோனி அவர்களின் உதவியுடன் அவ்வலுவலகத்திலிருந்த மாற்று சாவியை கொண்டு மேற்படி டிராயரை திறந்து பார்க்க அதில் 5 கத்தைகளாக 500 ரூபாய் நோட்டுகள் காணப்பட்டது. அதை எண்ணிபார்க்க அதில் 500 x 500 = 2,50,000/- இருந்தது. எனவே மேற்படி லஞ்சபணமானது விசாரணைக்காக பொது மேலாளர் திரு.ராமநாதன் மற்றும் Quality Control உதவி பொது மேலாளர் திரு.அந்தோனி ஆகியோர்கள் முன்னிலையில்

கைப்பற்றப்பட்டது. மேலும் இவ்வலுவலகத்தில் பொது மேலாளரது அலுவலக உதவியாளராக பணிபுரியும் திரு.செல்வராஜ் என்பவரிடமிருந்து 3-லட்சம் ரூபாயை State Bank of India பேரூர் வங்கி கிளையின் வங்கி கணக்கு எண்.20190986300-லிருந்து அதே வங்கியில் உள்ள தனது வங்கி கணக்கு எண். 20149126389-க்கு பணப்பரிமாற்றம் செய்துள்ளதாக திரு.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார். மேலும் மேற்படி டிராயரை திரு.கிருஷ்ணமூர்த்தி பயன்படுத்திவருவது சம்பந்தமாக ஏதேனும் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகிறதா என்று கேட்க அவ்வாறு எதுவுமில்லை என்று தெரிவித்தார். எனவே மேற்படி "C" என்று குறியீடு செய்யப்பட்ட டிராயரை திரு.கிருஷ்ணமூர்த்தி பயன்படுத்தி வருவது குறித்து ஒரு சான்றிதழானது உதவி பொது மேலாளர் திரு.அந்தோனி அவர்களிடமிருந்து பெறப்பட்டது. ஆக மொத்தம் ரூ.8,40,000/-ஐ திரு.கிருஷ்ணமூர்த்தியிடமிருந்து இந்த திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி பணிவரன் முறைசெய்யப்பட்ட காலத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத்தொகையை (Arrear Amount) பெற ஏற்பாடு செய்ததற்கு திரு.கிருஷ்ணமூர்த்தியிடம் லஞ்சமாக பணம் கொடுத்த திரு.சண்முகம், திரு.குப்புசாமி, திரு.செல்வராஜ், திரு.முத்துசாமி, திரு.அர்ச்சுனன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்கு மூலம் பதிவுசெய்யப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது மேற்படி பணிநிர்ணய வரன்முறை, நிலுவைதொகை சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குகளில் வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் நீதிமன்ற உத்தரவின்பேரில் இவ்வலுவலகத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான ஆவணங்கள் பக்கம் 1 முதல் 64 வரை உள்ளவைகள், திரு.கிருஷ்ணமூர்த்தியின் ஏப்ரல் 2022-க்கான Pay Slip மற்றும் தரக்கட்டுப்பாடு ஆய்வகத்தின் வருகைபதிவேடு (பக்கம் 1-10) ஆகியவற்றின் நகல்களில் பொது மேலாளர் திரு.ராமநாதன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைபற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையானது 30.05.2022-ம் தேதி 18.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 31.05.2022-ஆம் தேதி 01.30 மணிக்கு முடிக்கப்பட்டு அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.8,40,000/-ம் மற்றும் ஆவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் திரு.A.கிருஷ்ணமூர்த்தி, S/o.ஆறுமுகம், முது நிலை தொழிற்சாலை உதவியாளர், (தரக்கட்டுப்பாடு பிரிவு), கோவை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட், பச்சாபாளையம் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு

கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு, 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.8,40,000/- , 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் 1 முதல் 6 வரையிலானவை மற்றும் 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் 1 முதல் 5 வரையிலானவை. (Sdxxxx) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். Respected Sir, Received the complaint on 31.05.2022 at about 04.30 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.09/2022/AC/CB u/s. 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at about 05.00 hrs (Sd.xxxxxx) R.EZHILARASI, (31.05.2022) Inspr. of Police, VAC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

R. எழில் 31/05/2022
(R.எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.